தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**7 வயதுப்பிரிவு**
(01.01.2015 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)

## நாட்டுப்பற்று

ஒவ்வொரு மாந்தனும் தன் தாய்நாட்டின் மீது பற்றுக்கொள்ள வேண்டும். அது நாம் வாழும் நாட்டின் மீதும் பற்றுக்கொள்ள வைக்கும். இதற்குத் தமிழ்ச் சிறுவர்களாகிய நாம் எடுத்துக்காட்டாக வாழ வேண்டும். எங்கள் தாயகமாகிய தமிழீழம் மீது, நாம் அளவிட முடியாத பற்றுக் கொண்டுள்ளோம். எமக்கு அடைக்கலம் தந்த சுவிஸ் நாட்டின் மீதும் நாம் பற்றுக் கொண்டவர்களாக வாழ்வோம்.

தலைவர் மாமாவும் மாவீரர்களும் நாட்டுப்பற்றுடன் வாழ விரும்பும் எல்லோருக்கும் வழிகாட்டிகளாக நிற்பவர்கள். எங்கள் பெற்றோரும் ஆசிரியரும் எமக்குத் தாய்மொழி, கலை, பண்பாடுகளைக் கற்றுத்தந்து தாய்நாட்டுப் பற்றை ஊட்டுகின்றார்கள். இவர்களுடைய வழிகாட்டலை ஏற்று, நாம் நாட்டுப்பற்று உள்ளவர்களாக வளர்வோம். தாய்நாட்டிற்கும் வாழும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்போம்.

நன்றி,
வணக்கம்.